


புதுகை
# வரலாறு
நாளிதழ்

WWW.VARALARUU.COM | VARALARUU | PUDUGAIVARALARU | VARALARUU | 7502051351




சனி ❖ ஜூலை. 08, 2023 | புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 274 ❖ ரூ.10

### அவதூறு வழக்கில் ராகுல் காந்தியின் தண்டனையை உறுதி செய்து உயர்நீதிமன்றம்

# சலசலப்பு

## இந்த தீர்ப்பு 2024 தேர்தலுக்கு தயாராகி வரும் காங்கிரஸ் கட்சிக்கும் பெரும் பின்னடைவு, உச்சநீதிமன்றத்தை நாடவும் முடிவு



**அகமதாபாத், ஜூலை. 8–**
**ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட 2 ஆண்டுகள் சிறை தண்டனையை நிறுத்தி வைக்க மறுப்பு தெரிவித்த குஜராத் உயர் நீதிமன்றம், ராகுல் காந்தியின் மேல் முறையீட்டு மனுவினை தள்ளுபடி செய்தது.**

தேர்தல் பிரச்சாரத்தின்போது மோடி பெயர் குறித்து அவதூறாக பேசிய வழக்கில் சூரத் நீதிமன்றம் வழங்கிய தண்டனையை நிறுத்தி வைக்க வேண்டும் என்று ராகுல் காந்தியின் கோரிக்கையை குஜராத் உயர் நீதிமன்றம் நேற்று நிராகரித்தது. உயர்நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பு ராகுல் காந்திக்கும், 2024 தேர்தலுக்கு தயாராகி வரும் காங்கிரஸ் கட்சிக்கும் பெரும் பின்னடைவாக பார்க்கப்படுகிறது.

கடந்த 2019-இல் கர்நாடகாவில் தேர்தல் பிரச்சாரத்தில் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி, "எல்லா திருடர்களுக்கும் மோடி எனப் பெயர் வந்தது எப்படி?" என்று விமர்சித்தார். இது தொடர்பாக குஜராத் பாஜக எம்எல்ஏ பர்னேஷ் மோடி, சூரத் நீதிமன்றத்தில் அவதூறு வழக்குத் தொடர்ந்தார். இதில் ராகுலுக்கு 2 ஆண்டுகள் சிறை தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து, ராகுலின் எம்.பி. பதவி தகுதி இழப்பு செய்யப்பட்டது.

இதையடுத்து, சிறை தண்டனைக்குதடைகோரி ராகுல் காந்தி குஜராத் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். இந்த வழக்கு கடந்தமுறை விசாரணைக்கு வந்தபோது, "ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனை காரணமாக, அவர் எம்பி பதவியில் இருந்து தகுதியிழப்பு செய்யப்பட்டுள்ளார். இந்த தண்டனைக்கு தடை உத்தரவு பிறப்பிக்காவிட்டால், அது ராகுல் காந்திக்கும், அவரைத் தேர்வு செய்த நாடாளுமன்ற தொகுதிக்கும் பாதிப்பை ஏற்படுத்தும்" என்று வாதிடப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது வழக்கை விசாரித்த குஜராத் உயர்நீதிமன்றம், ராகுல் காந்திக்கு விதிக்கப்பட்ட இரண்டு ஆண்டுகள் சிறை தண்டனைக்கு இடைக்கால தடை விதிக்க மறுத்துவிட்டது. மேலும், இந்த வழக்கில், நீதிமன்றத்தின் கோடைகால விடுமுறைக்குப் பின்னர் இறுதி தீர்ப்பு வழங்கப்படும் என்று உத்தரவிடப்பட்டது.

இந்த நிலையில் மேல்முறையீட்டு வழக்கில் நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கில் தீர்ப்பு வழங்கிய நீதிபதி ஹேமந்த் பிரச்சாக், ஷெசன் நீதிமன்றத்தின் தீர்ப்பினை உறுதி செய்து மார்ச் 23ம் தேதி வழங்கிய உத்தரவுக்கு தடைவிதிக்க மறுப்பு தெரிவித்து உத்தரவிட்டார். மேலும், "இந்த வழக்கினைத் தவிர அவர் மீது மேலும் சில வழக்குகள் உள்ளன. வீர்சவர்காரின் பேரன் ஒருவரும் அவர் மீது வழக்கு தாக்கல் செய்துள்ளார். என்றாலும் தண்டனையில் எந்த அநீதியும் இல்லை. முற்றிலும் இல்லாத காரணங்களுக்காக தடை கோரி வருகிறார். தண்டனையை நிறுத்தி வைப்பது விதி அல்ல. விதிவிலக்கு" என்று தெரிவித்துள்ளார். ராகுல் காந்தியின் மேல்முறையீட்டை சூரத் ஷெசன் நீதிமன்றமும், குஜராத் உயர்நீதிமன்றமும் தள்ளுபடி செய்துள்ள நிலையில் அவர் உச்சநீதிமன்றத்தை நாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அரியலூரில் தொழில் தொடங்க வேளாண்மை பட்டதாரிகள் வருகிற 31ம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் – கலெக்டர்



அரியலூர், ஜூலை.8–
அரியலூர் மாவட்டத்தில் மாநில வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூபாய் ஒரு லட்சம் மானியத்துடன் தொழில் தொடங்க விரும்பும் வேளாண் பட்டதாரிகள் வருகிற 31ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார். இது பற்றி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆனி மேரி ஸ்வர்ணா வெளியிட்ட செய்தி குறிப்பில்கூறியுள்ளதாவது,

அரியலூர் மாவட்டத்தில் 2023–24ஆம் ஆண்டில், கலைஞரின் அனைத்து கிராம ஒருங்கிணைந்த வேளாண் வளர்ச்சி திட்டம், தேர்வு செய்யப்பட்டுள்ள 40 கிராமபஞ்சாயத்துக்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த கிராம பஞ்சாயத்துக்களில், வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் பொறியியல் பட்டப்பிரிவில் சான்று பெற்ற இளம் தொழில் முனைவோருக்கு, அக்ரி கிளினிக் அல்லது வேளாண்சார்ந்ததொழில் தொடங்குவதற்கு வேளாண் பட்டதாரி இளைஞர்களுக்கு 50 சதவீதம் அதிகபட்ச நிதி உதவியாக ரூ.1 லட்சம் பின்னேற்பு மூலதன மானியமாக வழங்கப்படும்.


இத்திட்டத்தின் கீழ் மானிய உதவி பெற விரும்பும் வேளாண்மை பட்டதாரிகளின் வயது, 21–ல் இருந்து 40–க்குள் இருக்க வேண்டும். வேளாண்மை, தோட்டக்கலை, வேளாண் பொறியியல் பிரிவில் குறைந்தபட்சம், இளநிலையில் பட்டப்படிப்பு முடித்திருக்க வேண்டும்.

அரசு மற்றும் தனியார் நிறுவனத்தில் பணியில் இருக்கக்கூடாது. விண்ணப்பதாரர் கணினித்திறன் பெற்றிருக்க வேண்டும். ஒரு குடும்பத்திற்கு ஒரு வேளாண் பட்டதாரி மட்டுமே நிதி உதவி பெற தகுதி உடையவர் ஆவார். இத்திட்டமானது பிரதம மந்திரியின் உணவு பதப்படுத்தும் குறு நிறுவனங்களை முறைப்படுத்தும் திட்டம் (PMFME) / வேளாண் உட்கட்டமைப்பு நிதியின் (AIF) கீழ் அனுமதிக்கக்கூடிய திட்டங்களின் அடிப்படையில் சுய தொழில்கள் தொடங்கலாம். இத்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு 50 சதவீத மானியமாக அதிகபட்சமாக ரூ.1 இலட்சம்வரை பின்னேற்பு மூலதன மானியமாக வழங்கப்படும்.

எனவே தகுதியுடைய, தொழில் தொடங்கவிருக்கும் வேளாண் பட்டதாரிகள், உரிய விண்ணப்பத்துடன் விரிவான திட்ட அறிக்கையுடன், கல்வி சான்றிதழ், ரேஷன் கார்டு, வங்கி கணக்கு புத்தகம் உள்ளிட்ட அனைத்து ஆவணங்களுடன், 31.07.2023–க்குள் அந்தந்த பகுதி வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா தெரிவித்துள்ளார்.

## பாவூர்சத்திரத்தில் மதிமுக சார்பில் தமிழக ஆளுநரை மாற்ற வலியுறுத்தி கையெழுத்து இயக்கம்



தென்காசி, ஜூலை. 8–
மதிமுக பொதுச்செயலாளர்வைகோ ஆணைக்கிணங்க தமிழகம் முழுவதும் மதிமுக சார்பில் தமிழக ஆளுநர் ஆர் என் ரவியை மாற்றக்கோரி கையெழுத்து இயக்கம் நடத்தி வருகின்றனர். அதன்படி தென்காசி மாவட்டம் பாவூர்சத்திரம் பேருந்து நிலையம் முன்பு தமிழக ஆளுநர் ஆர் என் ரவியை பதவியில் இருந்து மாற்ற வலியுறுத்தி மறுமலர்ச்சி திமுக சார்பில் மாபெரும் கையெழுத்து இயக்கம் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு மாநில துணை பொதுச் செயலாளர் தி.மு ராஜேந்திரன் தலைமை வகித்தார். தென்காசி தெற்கு மாவட்ட செயலாளர் ராம உதயசூரியன் முன்னிலை வகித்தார். கீழப்பாவூர் ஒன்றிய குழு தலைவர் காவேரி சீனித்துரை முதல் கையெழுத்து செய்து துவக்கி வைத்தார்.

இந் நிகழ்ச்சியில் கீழப்பாவூர் பேரூர் தலைவர் ராஜன், கல்லூரணி ஊராட்சி மன்ற தலைவர் ராஜ்குமார், குலசேகரபட்டி ஊராட்சி மன்ற தலைவர் முத்துமாலை அம்மாள், மதி செல்வன், திமுக ஒன்றிய செயலாளர் சீனித்துரை, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் தங்கம், இந்திய கம்யூனிஸ்ட் ஐயப்பன், காங்கிரஸ் மாவட்ட ஊராட்சி உறுப்பினர் சுப்பிரமணியன், காங்கிரஸ் வட்டார தலைவர் குமார் பாண்டியன், தலைமை தணிக்கை குழு உறுப்பினர் சுரண்டை ராமகிருஷ்ணன், மாவட்ட அவைத்தலைவர் தென்காசி வெங்கடேஸ்வரன், உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

### கோயில்களில் எந்த தவறும் நடந்துவிடக் கூடாது என்பதில்

## கருணாநிதி வழியை திராவிட மாடல் அரசு பின்பற்றுகிறது: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை ,ஜூலை.8–
கோயில்களில் எந்த தவறும் நடந்துவிடக் கூடாது என்ற முன்னாள் முதல்வர் கருணாநிதியின் வழியை திராவிட மாடல் அரசு பின்பற்றுவதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை, ராஜா அண்ணாமலைபுரம், அருள்மிகு கபாலீசுவரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில், இந்து சமய அறநிலையத் துறையின் திருக்கோயில்கள் சார்பில் 34 இணைகளுக்கான திருமணங்களை முதல்வர் மு.க. ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் அவர் பேசுகையில், "இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 34 இணையர்களுக்கு நம் அனைவருடைய வாழ்த்துகளோடு இங்கு மண விழா நிகழ்ச்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திருக்கோயில்களின் சார்பில், இதனை மிகச் சிறப்பாக எப்போதும் என்னால் 'செயல்பாபு' என்று அழைக்கப்படக்கூடிய அமைச்சர் சேகர்பாபு முன்னின்று இந்த நிகழ்ச்சியினை ஏற்பாடு செய்திருக்கிறார். இதற்காக நான் வழக்கம் போல் அவரை பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன். 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற இலக்கை நோக்கிச் நம்முடைய திராவிட மாடல் அரசு பீடுநடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பது அனைவருக்கும் நன்றாகத் தெரியும்.

குறிப்பாக, கல்வி – தொழில் – பொருளாதாரம்–சமூகம்–சமயம் ஆகிய அனைத்துத் துறைகளிலும், அனைத்து மக்களும் கோலோச்ச வேண்டும் என்று நினைக்கக்கூடிய அரசாக நம்முடைய திராவிட மாடல் அரசு நடைபோட்டுக் கொண்டிருக்கிறது. எந்த மனிதரையும் சாதியின் பேரால் தள்ளி வைக்கக் கூடாது. அதற்காகத்தான் அனைத்து சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம் என்ற சட்டத்தை நம்முடைய அரசு கொண்டு வந்திருக்கிறது.

இன்றைக்கு ராஜஸ்தான் மாநிலத்தில் 8 பெண்கள் உள்பட பட்டியலினத்தவர், பழங்குடியினர் சமூகத்தைச் சேர்ந்த 17 பேரை அர்ச்சகர்களாக்கி இருக்கிறார்கள். சென்னை உயர்நீதிமன்றமும் முறையாகப் பயிற்சி பெற்றவர்களாக இருந்தால் யார் வேண்டுமானாலும் அர்ச்சகராகலாம், அனைத்து சாதியினரும் அர்ச்சகராகலாம் என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை வழங்கியிருக்கிறது.

'எல்லார்க்கும் எல்லாம்' என்ற கருத்தியல் என்பது இதுதான். நம்முடைய ஆட்சியின் நோக்கத்தை இன்றைக்கு நீதிமன்றமும் அங்கீகரிக்கக்கூடிய காலமாக ஏன், இந்தியாவில் இருக்கக்கூடிய மற்ற மாநிலங்களும் அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய நிலை அமைந்திருக்கிறது.

1000 ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமையான, வரலாற்றுச் சிறப்புமிக்க 112 திருக்கோயில்களை பழமை மாறாமல் சீர் செய்வதற்கு 100 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு திருப்பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. திருக்கோயில்களுக்குச் சொந்தமான திருக்குளங்களைச் சீரமைக்கும் வகையில் கருத்துருக்களை வழங்குவதற்கு சென்னை, கோவை, திருச்சி மற்றும் மதுரை ஆகிய இடங்களைத் தலைமையிடமாக கொண்டு 4 ஆலோசகர்களும், திருக்கோயில்களிலுள்ள பழமையான மூலிகை ஓவியங்களை பாதுகாக்கும்வகையிலான வழிமுறைகளை வழங்குவதற்குத் தனி ஆலோசகரும் நியமிக்கப்பட்டு அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன.

மறைந்த பெரியவர் – தவத்திரு குன்றக்குடி அடிகளார் 'கோயிலைச் சுற்றிலும் மக்கள். மக்களைச் சுற்றிலும் கோவில்கள்' என்று சொல்வார்கள். மக்களுக்கு நன்மைகள் செய்யவே கோவில்கள் இருக்கின்றன. ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்று சொல்வது இதன் அடிப்படையில்தான். அந்த வகையில்தான் 34 இணையருக்கு திருக்கோயில்கள் சார்பில் திருமண விழாக்கள் நடத்தி வைக்கப்படுகின்றன.

இந்தத் துறைக்கு இந்து சமயத் துறை என்று பெயரல்ல, இந்து சமய அறநிலையத் துறை என்று பெயர். அதனால்தான் அறம் சார்ந்த தொண்டுகள் செய்யப்படுகின்றன. இது போன்ற அறப்பணிகளை தொடர்ந்து செய்யுங்கள் என்று நான் அனைவரையும் கேட்டுக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். எனவே, மணக்கோலம் பூண்டிருக்கும் மணமக்களை உங்களோடு சேர்த்து, நானும் மனதார, நெஞ்சார வாழ்த்துகிறேன். இவ்வாறு பேசினார்.

## "சத்தீஸ்கர் வளர்ச்சிக்கு தடைச் சுவராக இருப்பது காங்கிரஸ்தான்!" பிரதமர் மோடி தாக்கு



**ராய்பூர் , ஜூலை. 8–**
**"சத்தீஸ்கர் மாநில வளர்ச்சிக்கு முன்னாள் பனைமரம் போன்ற ஒரு தடைச் சுவர் உள்ளது. உங்களிடமிருந்து உங்கள் உரிமைகளைப் பறிக்கும் காங்கிரஸ் கட்சியே அந்தத் தடைச் சுவர்" என்று பிரதமர் மோடி விமர்சித்துள்ளார்.**

சத்தீஸ்கர் மாநில தலைநகர் ராய்பூரில் ரூ.7,600 கோடி மதிப்பிலான 8 திட்டங்களுக்கு பிரதமர் மோடி நேற்று அடிக்கல் நாட்டினார். ராய்பூரில் நடந்த விஜய் சங்கல்ப் பேரணியில் உரையாற்றிய பிரதமர்மோடி, "சத்தீஸ்கரின் வளர்ச்சி பயணத்தில் இன்று வரலாற்றுச் சிறப்பு மிக்க நாள். இந்த மாநிலம் இன்று ரூ.7 ஆயிரம் கோடி மதிப்பிலானதிட்டங்களைப் பரிசாக பெற்றுள்ளது. இது உள்கட்டமைப்பு, இணைப்பு வசதி மற்றும் மக்களின் வாழ்க்கையை எளிதாக்கும்.

இயற்கை வளங்கள் அதிகமிருக்கும் பகுதிகளில் புதிய வாய்ப்புகளை உருவாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளது. அரசின் நடவடிக்கைகள் சத்திஸ்கரில் தொழில்மயமாக்கலை வலுப்படுத்தியுள்ளது. ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னால் சத்தீஸ்கரில் 20 சதவீதத்துக்கு அதிகமான கிராமங்களுக்கு எந்தவிதமான மொபைல் இணைப்புகளும் இல்லை. இப்போது அது 6 சதவீதமாக குறைந்துள்ளது" என்றார்.

தனது பேச்சில் காங்கிரஸ் கட்சியின் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை பிரதமர் மோடி முன்வைத்தார். அவர் கூறுகையில், "சத்தீஸ்கர் காங்கிரஸ் கட்சியின் ஏடிஎம் ஆக மாறியுள்ளது. ஊழல் என்பது மதுவில் மட்டும் இல்லை; சத்தீஸ்கரில் காங்கிரஸ் ஆட்சியில் ஊழல் நடக்காத துறைகளே இல்லை. முறையற்ற ஆட்சிக்கு இந்த அரசு ஒரு முன்மாதிரியாக உருவாகியுள்ளது.

சத்தீஸ்கர் மாநிலத்தின் வளர்ச்சியின் முன்னால் பனை போல ஒரு தடைச் சுவர் உள்ளது. உங்களிடமிருந்து உங்கள் உரிமைகளைப் பறிக்கும் காங்கிரஸ் கட்சியே அந்தத் தடைச் சுவர். அந்த தடைச் சுவர் சத்தீஸ்கரை கொள்ளையடித்து நாசமாக்க முடிவு செய்துள்ளது. மாநிலத்தில் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான காற்று வீசுகிறது" என்று பிரதமர் மோடி கூறினார்.

ராய்பூர்பேரணிநடக்கும் இடத்துக்கு அருகில் நடந்த விபத்து குறித்து வருத்தம் தெரிவித்த பிரதமர் மோடி, "இன்று காலையில் இந்தப் பேரணியில் கலந்து கொள்வதற்காக வந்த மூன்று பேர் பேருந்து விபத்தில் உயிரிழந்ததாக கேள்விப்பட்டேன். விபத்தில் சிலர் காயமடைந்ததாகவும் அறிகிறேன். விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு எனது அஞ்சலியை செலுத்துகிறேன். காயமடைந்தவர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் அவர்கள் விரைவாக குணமடையவிழைகிறேன்" என்றுபிரதமர்தெரிவித்தார்.

பேரணி நடைபெறும் இடத்துக்கு அருகில் பேரணியில் பேருந்து ஒன்று சாலையில் நின்று கொண்டிருந்த டிரக்கின் மீது மோதிய விபத்தில் மூன்று பேர் உயிரிழந்தனர். 6 பேர் காயமடைந்தனர். இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ள மாநில முதல்வர் பூபேஸ் பாகல், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்குதலா ரூ.4 லட்சம் கருணைத்தொகை அறிவித்துள்ளார்.

கடந்த 2019–ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல் வெற்றிக்கு பின்னர் காங்கிரஸ் ஆளும் மாநிலம் ஒன்றுக்கு பிரதமர் மோடி செல்வது இதுவே முதல்முறை. சத்தீஸ்கர் மாநிலத்தில் விரைவில் சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெற இருப்பது குறிப்பிடத்தக்கது.

முன்னதாக, நிகழ்வுகளில் கலந்து கொள்வதற்காக ராய்பூர் வந்த பிரதமர் மோடியை மாநில ஆளுநர் பிஸ்வபூஷன் ஹரிசந்தன் மற்றும் முதல்வர் பூபேஸ் பாகல் விமான நிலையம் சென்று வரவேற்றனர்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







# கோவை சரக டிஐஜி விஜயகுமாரின் உயிரிழப்புக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல்

சென்னை, ஜூலை. 8–

கோவை சரக டிஐஜி விஜயகுமாரின் உயிரிழப்புக்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துள்ளார்.



முதல்வர் ஸ்டாலின் இரங்கல்: இது தொடர்பாக அறிக்கை வெளியிட்டுள்ள அவர், "கோவை சரக காவல்துறை துணைத் தலைவர் விஜயகுமார் IAS, நேற்று ஜீலை-7ம் தேதி அகால மரணம் அடைந்தார் என்ற துயரமான செய்தியைக் கேட்டு மிகுந்த அதிர்ச்சியும் வருத்தமும் அடைந்தேன். விஜயகுமார், தனது பணிக்காலத்தில் மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் உள்ளிட்ட பல்வேறு பணிப் பொறுப்புகளில் சிறப்பாகப் பணியாற்றி தமிழ்நாடு காவல்துறைக்குப் பெருமை சேர்த்தவர். அவருடைய இந்த மரணம் தமிழ்நாடு காவல் துறைக்குப் பேரிழப்பாகும். அவருடைய குடும்பத்தாருக்கும் காவல்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும் என்னுடைய ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

மதிமுக பொதுச் செயலாளர் வைகோ இரங்கல்: மதிமுக பொதுச் செயலாளர் வைகோ விடுத்துள்ள இரங்கல் செய்தியில், "தமிழக காவல்துறையில், கோயம்புத்தூர் சரக டி.ஐ.ஜி விஜயகுமார் தற்கொலை செய்துகொண்டு மாண்டார் என்ற செய்தி மிகுந்த அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியது. படித்துப் பட்டம் பெற்று, காவல்துறையில் உயர் பதவிக்கு வந்த விஜயகுமார், எத்தகைய மன அழுத்தத்திற்கு ஆளானார் என்பதை யூகிக்க முடியவில்லை. அவரது குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும், காவல்துறையினருக்கும் என்னுடைய கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என குறிப்பிட்டுள்ளார்.

### கோவை சரக டிஐஜி விஜயகுமார் தற்கொலை

# சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட இபிஎஸ் வலியுறுத்தல்

சென்னை , ஜூலை. 8–

கோவை சரக டிஐஜி விஜயகுமார் தற்கொலை தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வலியுறுத்தியுள்ளார்.



இது தொடர்பாக எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், "கோவை சரக காவல்துறை டிஐஜி விஜயகுமார் மரணமடைந்த செய்தியறிந்து மிகுந்த மனவேதனை அடைந்தேன். காவல்துறை துணை கண்காணிப்பாளராக தனது பணியை துவங்கி, பின்னர் நேரடியாக இந்திய காவல் பணிக்கு தேர்வாகி, டிஐஜி அளவிற்கு தன்னைத்தானே வளர்த்துக் கொண்ட பெருமைக்குரிய விஜயகுமாரின் பணி போற்றத்தக்கது. அவரின் மறைவு காவல்துறைக்கு பேரிழப்பு. அவரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், சுற்றத்தாருக்கும் எனது ஆழ்ந்த இரங்கல்கள்.

காலையில் வழக்கமான நடைபயிற்சி முடித்து வந்த விஜயக்குமார், தனது பாதுகாவலரின் கைத்துப்பாக்கியை வாங்கி, தன்னைத்தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டதாக செய்திகள் வருகின்றன. இது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்துகிறது. ஆகவே விஜயகுமார் தற்கொலையை சிபிஐ மூலம் விசாரித்து இதன் உண்மை பின்னணியை அறிய வேண்டுமென இந்த அரசை வலியுறுத்துகிறேன்." இவ்வாறு அதில் கூறியுள்ளார்.




# புதுக்கோட்டை அரசு முன்மாதிரி மேல்நிலைப்பள்ளியில் வாசிப்பு மன்றம் துவக்கம்



**புதுக்கோட்டை , ஜூலை. 8–**

புதுக்கோட்டை அரசு முன் மாதிரி மேல்நிலைப்பள்ளியில் வாசிப்பு மன்ற துவக்கவிழாவும், புதுகை வாசிக்கிறது நிகழ்ச்சியும் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு பள்ளி முதல்வர் பெ.சிவப்பிரகாசம் தலைமை வகித்தார். வாசிப்பு மன்றத்தைத் தொடங்கி வைத்து புதுக்கோட்டை வாசகர் பேரவை செயலர் சா. விஸ்வநாதன் சிறப்புரையாற்றினார். "நல்ல நூல்கள் வாசிப்பு ஒவ்வொருவருடைய வாழ்விலும் அறிவு ஒளியைப் பாய்ச்சுகிறது. காந்தி தன் வாழ்க்கையை மாற்றியது ரஸ்கின் எழுதிய "கடையனுக்கும் கடைத்தேற்றம்" என்ற நூல் என்கிறார். திருக்குறள் தன் வாழ்வின் வழிகாட்டி என்கிறார் டாக்டர் அப்துல்கலாம். நல்ல வாசிப்பாளன் சாதாரண மனிதரிலிருந்து வேறுபடுகிறான். தினந்தோறும் குறிப்பிட்ட நேரத்தில் புத்தக வாசிப்பு என்பதை பழக்கப்படுத்திக் கொள்ளுங்கள். ஆரம்பத்தில் சிரமமாகவே இருக்கும். காலப் போக்கில் அதுவே நம் சுவாசமாகிவிடும். ஆகவே அறிவைப்பெருக்க, நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொள்ள தொடர் வாசிப்பு மிகமிக அவசியம்" என்றார் வாசகர் பேரவைச் செயலர். நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய கவிஞர் பீர் முகமது, "போட்டி நிறைந்த உலகில் தன்னை நிலை நிறுத்திக்கொள்ள பாடப்புத்தகத்தை தாண்டிய பரந்த வாசிப்பு மிகமிக அவசியம். பள்ளிப் படிப்பை மட்டுமே முடித்த என்னால் ஒரு கவிஞராக, எழுத்தாளனாக ஆக முடிந்ததென்றால் என்னுடைய தொடர் வாசிப்பே அதற்கு காரணம். நீங்கள் நல்ல வாசிப்பாளராக மாறுங்கள். வாழ்வில் வெற்றி கிடைக்கும்." என்றார்.

புதுகை வாசிக்கிற நிகழ்வை ஒட்டி மாணவர்களுக்கு வாசகர் பேரவை சார்பில் கலாம் சொற்பொழிவு நூல்கள் பரிசாக வழங்கப்பட்டது. முன்னதாக பள்ளி துணை முதல்வர் G.செந்தில் வரவேற்புரையாற்றினார். நிறைவாக முதுகலை ஆசிரியர் ஆர். பிரபு நன்றி கூறினார். நிகழ்வில் ஏராளமான மாணவ மாணவிகள் பங்கேற்றனர்.

# ஆவுடையார்கோவில் வெள்ளாளவயல் கிராமத்தில் நடைப்பெற்ற கும்பாபிஷேகம் பக்தர்கள் பரவசம்

ஆவுடையார்கோவில் , ஜூலை. 8–



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் வெள்ளாளவயல் கிராமத்தில் ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ பெரிய அய்யனார் உட்பட ஏழு ஆலய மற்றும் பரிவார தேவதைகளுக்கு மகா கும்பாபிஷேக விழா நடைப்பெற்றது.

ஆவுடையார்கோவில் தாலுகாவில் உள்ள வெள்ளாளவயல் கிராமத்தில் அமைந்து அருள்பாலித்துகொண்டு வரும்ஸ்ரீ செல்வ விநாயகர் ஸ்ரீ பெரிய அய்யனார் ஸ்ரீ சுப்பிரமணியர் ஸ்ரீ பெரிய கருப்பர் ஸ்ரீ சின்ன கருப்பர் ஸ்ரீ காமாட்சி அம்மன் ஸ்ரீ அரசு முக கருப்பர் மற்றும் பரிவார தேவதைகளுக்கு கும்பாபிஷேக விழா நடத்துவது என கிராமத்தினர் முடிவு செய்யப்பட்டது.

இதற்காக யாகசாலை அமைத்து கணபதி ஹோமத்துடன் விழா தொடங்கியது. அதனைத் தொடர்ந்து இரண்டு நாட்களாக மூன்று கால யாகபூஜைகள் நடைபெற்று வந்தது விழாவின் முக்கிய நிகழ்வாக பல்வேறு பகுதிகளில் இருந்து கொண்டுவரப்பெற்று பூஜிக்கப்பட்ட புனித நீரோடு கடம் புறப்பாடு நிகழ்வு நேற்று நடைபெற்றது. அதனை தொடர்ந்து சிவாச்சாரியார்கள் வேத மந்திரங்கள் முழங்க மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

முதலில் ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்திற்கும் ஸ்ரீ பெரிய அய்யனார் உட்பட ஏழு ஆலயங்களுக்கும் மற்றும் அதன் அருகில் உள்ள பரிவார தெய்வங்களுக்கும், கும்பாபிஷேகம் விழா நடைபெற்றது. அங்கு திரண்டு இருந்த மக்கள் மற்றும்ஆன்மீக மெய்யன்பர்கள் சுவாமி தரிசனம் செய்தனர். அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டதுநிகழ்வுக்கு திருவாகுடி ஊராட்சி மன்ற தலைவர் கலா கருப்பையா உட்பட 2000க்கும் மேற்பட்ட பொதுமக்களும்கலந்து கொண்டனர். ஏம்பல் போலீசார் பாதுகாப்பு பணியை மேற்கொண்டனர்.

# தமிழக அரசின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக மொழி சிறுபான்மை அமைப்பினர் புகார் ஆளுநர் மாளிகை தகவல்



சென்னை , ஜூலை. 8–

தமிழக அரசின் கொள்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளதாக மொழி சிறுபான்மை அமைப்பினர் புகார் தெரிவித்துள்ளதாக ஆளுநர் மாளிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஆளுநர் மாளிகையின் ட்விட்டர் பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "ஆளுநர் ரவியை மொழி சிறுபான்மை அமைப்பின் உறுப்பினர்கள் சந்தித்தனர். தெலுங்கு, மலையாளம், கன்னடம் போன்ற தென் மாநில மொழிகள் உட்பட வேறு எந்த இந்திய மொழிகளையும் அனுமதிக்க வகை செய்யாத மாநில அரசின் கொள்கைகளால் தங்கள் குழந்தைகளுக்கு தாய்மொழியை கற்பிக்க இயலாத தங்களின் சிரமங்களை விளக்கினர்.

தங்களின் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு பற்றியும் ஆளுநரிடம் விளக்கினர். இத்தகைய கொள்கையால் 2.8 கோடிக்கும் அதிகமான மொழிசிறுபான்மையினர் தங்கள் தாய்மொழி மற்றும் கலாசாரத்தை மறந்து விடுவதாக அவர்கள் புகார் தெரிவித்தனர். வளமான தமிழ் மொழியை மகிழ்ச்சியுடன் ஏற்கிறோம். ஆனால் தங்கள் தாய்மொழியையும் கற்க அனுமதிக்க வேண்டும் என ஆளுநரிடம் கோரிக்கை விடுத்தனர்" என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# காரைக்காலில் தூய்மை பணியில் ஈடுப்பட்ட மாவட்ட கலெக்டர், பள்ளி மாணவர்கள்

காரைக்கால், ஜூலை. 8–



மத்திய அரசின் சுவச்சதா பக்வாடா திட்டத்தின் கீழ் நேற்று காலை காரைக்கால் மாவட்ட நிர்வாகம்மற்றும் பேரிடர் மீட்புத்துறை மேலும் ஓ.என்.ஜி.சி. நிர்வாகம் இணைந்து கடற்கரைச் சாலையில் பொதுமக்களுக்கு காலை 7.00 மணி முதல் தூய்மையை வலியுருத்தி விழிப்புணர்வு நிகழ்வை நடத்தினார்கள். கடற்கரையை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியம் குறித்தும் விழிப்புணர்வு நடைபெற்றது.

பிறகு ஓ.என்.ஜி.சி. பள்ளியைச் சேர்ந்த 400–க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் ஆப்தமித்ரா குழுவைச் சேர்ந்தவர்கள், மற்றும் சிவில் டிபன்ஸ் தன்னார்வர்கள், காரைக்கால் நகராட்சி ஊழியர்கள், எச். ஆர். ஸ்கொயர் நிறுவனத்தைச் சேர்ந்த தூய்மை பணியாளர்கள் ஓ.என்.ஜி.சி. நிறுவன ஊழியர்கள் சுமார் 600–க்கும் மேற்பட்டோர் இந்நிகழ்வில் காலை 7.00 மணி முதல் 9.00 மணி வரை கடற்கரைச் சாலையில் தூய்மை பணியில் ஈடுபட்டார்கள். இந்நிகழ்வினை காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் கலந்து கொண்டு துவக்கி வைத்து தூய்மை பணியில் ஈடுபட்டார்.

மேலும் ஓ.என்.ஜி.சி. நிறுவனத்தை சேர்ந்த நிர்வாக இயக்குநர் செபஸ்டின் மற்றும் முதன்மை பொது மேலாளர் சுதீஷ் ஆகியோரும் துணை ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) பாஸ்கரன் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வின் இறுதியில் பேசிய மாவட்ட ஆட்சியர் சுத்தமான ஆரோக்கியமான வாழ்க்கைக்கு சுகாதாரம் மிகவும் அவசியம் என்றும் அடிக்கடி தூய்மை பணியில் ஈடுபட வேண்டும் என்றும் அவரவர் வீடுகளிலும், அலுவலகங்களிலும், பள்ளிகளிலும், பொது இடங்களிலும் இதுபோன்ற தூய்மை பணியில் ஈடுபட வேண்டும் எனவும் ஆட்சியர் கேட்டுக் கொண்டார்.

# பொது சிவில் சட்டம் விஷயத்தில் காங்கிரஸ் மவுனம் காப்பது ஏன்? கேரள முதல்வர் பினராயி விஜயன் கேள்வி

திருவனந்தபுரம் , ஜூலை. 8–

பொது சிவில் சட்ட விவகாரத்தில் காங்கிரஸ் கட்சி கள்ள மவுனம் காப்பது ஏன் என்று கேரள முதல்வர் பினராயி விஜயன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள ட்விட்டர் பதிவில், "பொது சிவில் சட்டம் தொடர்பாக காங்கிரஸ் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறதா? காங்கிரஸ் கட்சியின் சந்தேகத்திற்கிடமான மௌனம் வஞ்சகமானது. இந்தியாவின் பன்முகத்தன்மை மீதான சங்பரிவார்களின் தாக்குதல்களை எதிர்ப்பது காலத்தின் தேவையாக இருக்கும்போது, அவர்களுக்கு எதிராக உறுதியான நிலைப்பாட்டை எடுக்க காங்கிரஸ் கட்சி தயாரா?" என்று கேட்டுள்ளார்.

முன்னதாக கடந்த சனிக்கிழமை பேசிய இமாச்சலப் பிரதேச முன்னாள் முதல்வர் வீரபத்ரசிங்கின் மகனும், இமாச்சலப் பிரதேச காங்கிரஸ் கமிட்டித் தலைவர் பிரதிபா சிங்கின் மகனும், அம்மாநில அமைச்சருமான விக்ரமாதித்ய சிங், பொது சிவில் சட்டத்தை காங்கிரஸ் கட்சி ஆதரிக்கும் என்று தெரிவித்திருந்தார். “காங்கிரஸ் கட்சி எப்போதுமே இந்தியாவின் அனைத்துப் பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. பொது சிவில் சட்டத்தைப் பொருத்தவரை, இதில் நாங்கள் வேற்றுமையில் ஒற்றுமையை நம்புகிறோம். எந்தச் சட்டத்தையும் கொண்டு வருவதற்கு முன், இந்தச் சட்டம் தங்களுக்கு எதிரானது என்று யாரும் நினைக்கக் கூடாது. சம்பந்தப்பட்ட அனைத்து கட்சிகளுக்கும் இடையே வலுவான கருத்தொற்றுமை உருவாக்கப்பட வேண்டும். அனைவரின் ஒப்புதலோடு இந்த சட்டத்தை மத்திய அரசு நிறைவேற்ற வேண்டும்” என்று விக்ரமாதித்ய சிங் தெரிவித்திருந்தார்.



மேலும், “இந்த விவகாரத்தில் கட்சித் தலைமை எடுக்கும் இறுதி முடிவுக்கு நாங்கள் கட்டுப்படுவோம். நாட்டின் ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாட்டைப் பொருத்தவரை, நாங்கள் இந்திய மக்களின் தேசிய உணர்வுகளுடன் நிற்கிறோம்” என்றும் அவர் கூறினார்.

முன்னதாக, பொது சிவில் சட்டத்தை ஆதரித்துப் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, ஒரு குடும்பம் இரண்டு வித சட்டங்களால் நிர்வகிக்க முடியாது என்றும் எனவே, நாடு எனும் குடும்பத்திற்கு ஒரே மாதிரியான சட்டம் தேவை என்றும் கூறி இருந்தார்.

இதற்கு பதில் அளித்திருந்த முன்னாள் மத்திய அமைச்சர் ப. சிதம்பரம், "ஒரு தேசத்தை ஒரு குடும்பத்திற்கு சமன் செய்வது சரியாகத் தோன்றினாலும், உண்மை மிகவும் வித்தியாசமானது. குடும்பம் இரத்த உறவுகளால் பிணைக்கப்பட்டுள்ளது. ஒரு குடும்பத்தில் கூட பன்முகத்தன்மை இருக்கும். அரசியல்-சட்ட ஆவணமான அரசியல் சாசனத்தின் மூலம் ஒரு நாடு ஒன்றிணைக்கப்படுகிறது. இந்திய அரசியலமைப்பு இந்திய மக்களின் பன்முகத்தன்மையை அங்கீகரித்துள்ளது. பொது சிவில் சட்டம் என்பது ஒரு கனவு. பெரும்பான்மை அரசாங்கத்தால் அதை மக்கள் மீது திணிக்க முடியாது.

பொது சிவில் சட்டம் மக்கள் மீது திணிக்கப்பட்டால் அது பிளவுகளை விரிவுபடுத்தும். பொது சிவில் சட்டம் குறித்த பிரதமர் மோடியின் உரை, நாட்டில் நிலவும் பணவீக்கம், வேலையின்மை, வெறுக்கத்தக்க குற்றங்கள், பாகுபாடு மற்றும் மாநிலங்களின் உரிமைகளை மறுப்பது ஆகியவற்றிலிருந்து கவனத்தைத் திசைதிருப்பும் நோக்கம் கொண்டது. மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். வாக்காளர்களைப் பிரித்து அடுத்த தேர்தலில் வெற்றி பெற பாஜக பொது சிவில் சட்டத்தை களமிறக்குகிறது” என்று தெரிவித்திருந்தார். காங்கிரஸ் கட்சியின் நாடாளுமன்ற வியூகக் குழுவானது, காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தியின் இல்லத்தில், பொது சிவில் சட்டம் தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தியது.



புதுச்சேரி மாநில வளர்ச்சி குறித்து முதலமைச்சர், சபாநாயகர், அமைச்சர்கள் மற்றும் அரசு உயர் அதிகாரிகளுடன் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமைச் செயலகத்தில் ஆலோசனை நடத்தினார்.



புதுச்சேரிக்கு வருகை தந்த மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு ,புதுச்சேரி துணை நிலை ஆளுநர் தமிழிசை சௌந்தரராஜன், முதல்வர் என். ரங்கசாமி, சபாநாயகர் செல்வம், போக்குவரத்து அமைச்சர் சந்திர பிரியங்கா மற்றும் அமைச்சர்களும் பொன்னாடை போர்த்தி பூச்செண்டு அளித்து வரவேற்றனர்.

# மங்களம் கிராமம் ஆரணி ஆற்றில் மோட்டார் சைக்கிளில் மணல் கடத்த முயன்ற மூன்று பேர் சிறையில் அடைப்பு

ஊத்துக்கோட்டை, ஜூலை8-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம்,ஆரணி காவல் நிலைய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர் பாஸ்கர் தலைமையில் போலீசார் நேற்று ரோந்து பணி மேற்கொண்டனர். மங்களம் கிராமத்தில் ஆரணி ஆற்றில் சென்றபோது மோட்டார் சைக்கிளில் மணல் கடத்த முயன்ற மூன்று பேரை சுற்றி வளைத்து கைது செய்தனர்.



மணல் கடத்த முயன்ற வழக்கில் சிறையில் அடைக்கப்பட்ட குற்றவாளிகளை படத்தில் காணலாம்.

பின்னர், காவல் நிலையம் கொண்டு வந்தனர். விசாரணையில் அவர்கள் மங்களம் கிராமத்தைச் சேர்ந்தவர்களான ரஞ்சித்(வயது29),தேவன்(வயது30),சாந்தகுமார்(வயது28) என்பது தெரியவந்தது. குற்றவாளிகள் மூன்று பேர் மீதும் ஆரணி காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து பொன்னேரி முதல் நிலை குற்றவியல் நீதிமன்ற மாஜிஸ்ட்ரேட் முன்னிலையில் ஆஜர் செய்து சிறையில் அடைத்தனர்.

## திருவொற்றியூர் மேற்கு பகுதி 3வது வார்டில்

# விளையாட்டு மைதானம் ரயில்வே இடம் என்பதால், இரயில்வே அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு

சென்னை, ஜூலை8-

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மேற்கு பகுதி 3வது வார்டு பர்மா நகர் அன்னை சிவகாமி நகரில் இருக்கும் விளையாட்டு மைதானம் ரயில்வே இடம் என்பதால், இரயில்வே அதிகாரிகளுடன் நேற்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



இந்த ஆய்வில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் ,சட்ட மன்ற உறுப்பினர் மாதவரம் எஸ் சுதர்சனம், வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் அயலக அணி தலைவர் கலாநிதி வீராசாமி, திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் 1வது மண்டல குழு தலைவர் திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் தி.மு. தனியரசு சென்னை வடக்கு வட்டார சிவ குரு பாலன் திருவொற்றியூர் மேற்கு பகுதி செயலாளர் வை.மா.அருள் தாசன், வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், மாவட்ட பொருளாளர் ஆனந்தன், 3வது வார்டு மாமன்ற உறுப்பினர் தமிழரசன்,5வது வார்டு மாமன்ற உறுப்பினர் கே.பி.சொக்கலிங்கம் ,மண்டலம்-1 உதவி ஆணையர் நவேந்திரன், பொறியாளர் தணிகை வேலன்,உதவிபொறியாளர் ஜெயக்குமார் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் பகுதி நிர்வாகிகள் வட்ட செயலாளர்கள் வட்ட நிர்வாகிகள்மாவட்டபகுதி அணிகளின் நிர்வாகிகள் மற்றும் அன்னை சிவகாமி நகர் ஊர் நிர்வாகிகள் ஆகியோர் இருந்தனர்.

# “காவல் துறை காலிப் பணியிடங்களை நிரப்புவதே டிஐஜி விஜயகுமாருக்கு செலுத்தும் மரியாதை” – அண்ணாமலை

கோவை, ஜூலை8-

காவல் துறையினருக்கு ஆண்டுக்கு இருமுறை 10 அல்லது 15 நாட்கள் விடுப்பு அளிக்க வேண்டும் என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை யோசனை தெரிவித்துள்ளார். மேலும், “டிஐஜி விஜயகுமாருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்துகிறார் என்றால், போர்க்கால அடிப்படையில் காவல் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும்” என்று அவர் கூறினார்.

இது தொடர்பாக கோவை விமான நிலையத்தில் நேற்று (ஜூலை 7) செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “காவல் துறையில் குறிப்பாக கீழ்மட்டத்தில் காவலர், தலைமைக் காவலர், உதவி ஆய்வாளர் வரையுள்ளவர்களுக்கு வேறு எந்தத் துறையிலும் இல்லாத வகையில், உச்ச கட்ட மன அழுத்தம் உள்ளது. அதற்கு மேல் உள்ள அதிகாரிகளுக்கு நிர்வாக ரீதியாக மன அழுத்தம் உள்ளது. அவர்களுக்கு வேலைப்பளு இருக்கும். மேலும், குடும்பம் ஒரு இடத்திலும், பணிபுரியும் இடம் பல நூறு கிலோ மீட்டருக்கு அப்பால் ஒரு இடத்திலும் இருக்கும். காவல் துறையை முதலில் சீரமைக்க வேண்டும். காவல் துறையினரின் மன அழுத்தத்தை குறைக்க வேண்டும். இதில், தமிழகம் முன்னோடியாக இருக்க வேண்டும்.

தமிழக காவல் துறையில் தற்போது பத்தாயிரம் காலிப் பணியிடங்கள் உள்ளன. அதனை நிரப்பிவிட்டாலே தற்போது உள்ள காவலர்களுக்கான பணி அழுத்தம் என்பது குறையும். எனவே, முதல்வர் மு.க.ஸ்டாலின், டிஐஜி விஜயகுமாருக்கு மரியாதை செலுத்துகிறார் என்றால், போர்க்கால அடிப்படையில் இரண்டு ஆண்டுகளில் காவல் துறையில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்ப வேண்டும். திமுக ஆட்சிக்கு வந்தவுடன் இதற்காகவே முன்னாள் நீதியரசர் சி.டி. செல்வம் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் குழுவின் அறிக்கை தற்போது வரை வரவில்லை. அதனை பொதுவெளியில் வெளியிட்டு, நடைமுறைப்படுத்த வேண்டும்.

காவல்து றையினருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பணியிடமாறுதல் கூடாது. பாதுகாப்பு பணியில் ஈடுபடும் காவலர்களுக்கு கழிப்பிட வசதிகூட இருப்பதில்லை. எனவே, காவலர்கள் பணி செய்யும் இடங்களில் உணவு, கழிப்பிட வசதி, குடிநீர், போக்குவரத்து வசதி ஆகியவற்றை அளிக்க வேண்டும். கட்டாயமாக வாரத்துக்கு ஒருநாள் விடுப்பு அளிக்க வேண்டும். மேலும், ஆண்டுக்கு இருமுறை 10 அல்லது 15 நாட்கள் மொத்தமாக விடுப்பு அளிக்க வேண்டும்.

டிஐஜி விஜயகுமார் மரணம் குறித்து உயர் நீதிமன்ற மேற்பார்வையில், சிறப்பு புலனாய்வு குழு விசாரணை மேற்கொள்ள வேண்டும். இறப்புக்கான காரணங்கள் குறித்து அவர்கள் முழுமையாக ஆராய வேண்டும். விஜயகுமாரின் வாரிசுக்கு 'குரூப் ஏ' தகுதியில் அரசு வேலை அளிக்க வேண்டும். தற்கொலை தூண்டப்பட்டதா எனவும், மன அழுத்தம் உட்பட எல்லா காரணங்களையும் ஆராய வேண்டும்.

கோவையின் முன்னாள் பொறுப்பு அமைச்சர் செந்தில் பாலாஜி மீது அமலாக்கத்துறை விசாரணை ஒரு பக்கம் நடந்து வருகிறது. அது தொடர்பாக வழக்கு கோவையிலும் உள்ளது. இந்நிலையில், விஜயகுமாரின் தற்கொலை சம்பவம் நடந்துள்ளது. எதையும் தொடர்புபடுத்தி நாங்கள் பேசவில்லை. இருப்பினும், எல்லாவற்றையும் முழுமையாக பார்க்க வேண்டும். ஒரு வழக்கை எப்படி கையாள வேண்டும் என காவல் துறை அதிகாரிகள் மீது உச்சபட்ச மன அழுத்தம் உள்ளது.

மனதளவில் பலவீனமான மனிதர் தேர்வில் தேர்ச்சி பெற்று, ஐபிஎஸ் பயிற்சி அனைத்தையும் தாண்டி வர முடியாது. தற்கொலைக்கு தூண்டிய காரணம் என்ன என்பதை செல்போன் உள்ளிட்டவற்றை ஆய்வு செய்து அறிய வேண்டும்” என்று அவர் கூறினார்.



புதுவை தாகூர் கலைக்கல்லூரியில் மத்திய நடுவன் அரசின் நிதித்துறை அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் புதுவை மாநிலத்தை சேர்ந்த பல்வேறு வங்கிகள் மூலம் சுமார் 2,600/= கோடியளவில் கல்விக்கடன், விவசாயக்கடன், வீட்டுக்கடன், சிறு தொழில் தொடங்க கடன் உள்ளிட்ட மாபெரும் கடன் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன் தொடர்ச்சியாக காரைக்கால் மாவட்டத்தில் புதுவையில் இருந்து நேரலையாக இன்நிகழ்வு நி.ஏ.எஸ் திருமண மண்டபத்தில் ஒளிபரப்பபட்டது. இந்நிகழ்வில் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் குலோத்துங்கன் தலைமையேற்று நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வில் பயிற்சி ஆட்சியர் சம்யக் ஜெயின் மற்றும் கூடுதல் வேளாண் இயக்குநர் செந்தில்குமார், கால்நடை பராமரிப்புத்துறை கூடுதல் இயக்குநர் கோபிநாத், மற்றும் மீன்வளத்துறை துணை இயக்குநர் சவுந்திரபாண்டியன் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் மற்றும் இந்தியன் வங்கியின் சகாயம் பிராங்ளின் மற்றும் முன்னனி வங்கிகள் உள்ளிட்ட காரைக்காலில் உள்ள அனைத்து வங்கியின் மேலாளர்கள் மற்றும் சுயஉதவி குழுவை சேர்ந்த மகளிர் உள்ளிட்ட 700-க்கும் மேற்பட்டவர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டார்கள். இந்நிகழ்வில் காரைக்கால சேர்ந்த பல்வேறு பயனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் காசோலைகள் வழங்கினார்..



புதுச்சேரியில் மாநில முதல்வர் ரங்கசாமியை, காரைக்கால் மாவட்ட விவசாய சங்க நிர்வாகிகள் சந்தித்து விவசாயிகளின் கூட்டுறவு சங்க கடன் தள்ளுபடி என அறிவித்தும் மூன்றுவது ஆண்டாக கடன் பெற முடியவில்லை எனவும் சென்ற முறை சந்தித்தப்பொழுது விரைவில் நடவடிக்கை ஏடுப்பத்தாக உறுதி அளித்ததையும் கூறி விவசாயிகளுக்கு கடன் வழங்க வேண்டும் என கேட்டு கொண்டனர். முதல்வர் விவசாயிகளிடம் மத்திய நிதி அமைச்சர் வருவதால் அவர் வந்து சென்ற பின் உரிய நடவடிக்கை எடுப்பாதக உறுதி கூறினார் மேலும் பருத்திக்கு பயிர் காப்பீடு பெற்று தர வேண்டுகோள் விடுத்தோம் அதனை ஏற்று கொண்டு வேளாண்மை துறை அமைச்சரிடம் கூறி காப்பீடு நிறுவனத்திடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக கூறி உள்ளார்கள் என தெரிவித்தனர்



சென்னை, ஆவடியை அடுத்த திருமுல்லைவாயலில் கொடியிடை நாயகி உடனுறை மாசிலாமணீஸ்வரர் ஆலய மகா கும்பாபிஷேக விழா வெகு விமர்சையாக நடைபெற்றது. ஆவடி மாநகராட்சிக்கு உட்பட்ட திருமுல்லைவாயலில் அமைந்துள்ள இந்த ஆலயமானது 25 ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த கோவிலாகும், இந்த ஆலயத்துக்கு வரும் பக்தர்கள் வேண்டிய வரம் தரும் ஈசனாகவும் விளங்கி வருவதால் அப்பகுதியை சுற்றி உள்ள ஊர் பொதுமக்கள் கும்பாபிஷேகத்தை காண ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய வந்திருந்தனர். கும்பாபிஷேக விழாவில் முன்னாள் பால்வளத்துறை திமுக அமைச்சர் ஆவடியின் சா.மு. நாசர், முன்னாள் கிராம தலைவர் திருவள்ளூர் மேற்கு மாவட்ட பாஜக துணைத் தலைவருமான டி.ஆர். ஞானவேல், ஏ.முல்லை ஞானம், ஆவடி மேயர் கு. உதயகுமார், பாஜக மாநில மாவட்ட நகர நிர்வாகிகள் மற்றும் திமுக அதிமுக உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். விழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் ஆலய செயல் அலுவலர் நாராயணன் மற்றும் கும்பாபிஷேக விழா குழுவினர் சிறப்பாக செய்திருந்தனர்.



காரைக்கால், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறையின் சார்பில் 50% அரசு மானியத்தில் கண்ணாடி நுண்ணிழை கட்டுமரம் (Fibre Reinforced Plastic Cattamaran) வழங்கும் மாநில அரசின் திட்டத்தின் கீழ் கடந்த ஆண்டு 8 மீனவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அரசின் 50% மானியத்தொகை தலா ரூ.75,000/- வீதம் காரைக்கால் மீனவர் கூட்டுறவு விற்பனை ஒன்றியத்திற்கு வழங்கப்பட்டது. கட்டி முடிக்கப்பட்ட 3 கண்ணாடி நுண்ணிழை கட்டுமரங்களை காரைக்கால் வடக்கு தொகுதி காரைக்கால்மேட்டை சேர்ந்த 3 பயனாளிகளுக்கு சட்டமன்ற உறுப்பினர் திருமுருகன் வழங்கினார். காரைக்கால், மீனவளம் மற்றும் மீனவர் நலத்துறை துணை இயக்குநர் சௌந்திரபாண்டியன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர். தேர்ந்தெடுக்கப்பட்ட இதர பயனாளிகளுக்கும் அவர்களுக்கான படகுகள் கட்டப்பட்டு வருவதால் விரைவில் அவர்களுக்கான படகுகள் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டது

# பாஜகவில் இருந்து விலகி மீண்டும் அதிமுகவில் இணைந்தார் முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம்

சென்னை, ஜூலை8-

கடந்த ஆண்டு பாஜகவில் இணைந்த அதிமுக முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம், நேற்று மீண்டும் அதிமுகவில் இணைந்தார்.



மதுரை புறநகர் மாவட்டம் சோழவந்தான் தொகுதி அதிமுக முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம், கடந்த 2021ம் ஆண்டு நவம்பர் மாதம் பாஜக மாநிலத் தலைவர் அண்ணாமலை முன்னிலையில் பாஜகவில் இணைந்தார். இதனைத் தொடர்ந்து பாஜகவின் கூட்டுறவு பிரிவு மாநிலத் தலைவராக அவர் நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், பாஜகவில் இருந்து விலகி நேற்று சென்னை, பசுமைவழிச் சாலையில் உள்ள இல்லத்தில் எடப்பாடி பழனிசாமி முன்னிலையில் முன்னாள் எம்எல்ஏ மாணிக்கம் மீண்டும் அதிமுகவின் அடிப்படை உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டார்.

# தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் சட்டம் பயின்ற 500 பட்டதாரிகள் இளம் வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் "வழக்கறிஞர் பதிவு விழா

சென்னை, ஜூலை8-

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பார் கவுன்சிலில் சட்டம் பயின்ற 500 பட்டதாரிகள் இளம் வழக்கறிஞர்களாக பதிவு செய்யும் "வழக்கறிஞர் பதிவு விழா" {ENROLMENT FUNCTION) உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்றது.



இவ்விழாவில், பார் கவுன்சில் தலைவர் அமல்ராஜ். வரவேற்று, தலைமையுரையாற்றினார். மேலும், இந்நிகழ்ச்சியில் இளம் வழக்கறிஞர்களுக்கு, கூடுதல் மாநில அரசு வழக்கறிஞர் பாபு முத்து மீரான் பரிந்துரையும், பார் கவுன்சில் ENROLMENT COMMITTEE MEMBER ஜே.பிரிசில்லா பாண்டியன் உறுதிமொழியும் செய்வித்தனர்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சஞ்சய் விஜய்குமார் கங்கபுர்வாலா வழக்கறிஞர்களாக பதிவு பெறும் இளம் சட்ட பட்டதாரிகளுக்கு தொழில் முறை நெறி குறித்தும் மற்றும் வாழ்த்தியும் சிறப்புரையாற்றினர். மேலும், இவ்விழாவில் கலந்து கொண்ட மூத்த வழக்கறிஞரும், அகில இந்திய பார் கவுன்சிலின் துணைதலைவருமான எஸ்.பிரபாகரன், மூத்த வழக்கறிஞரும் பார் கவுன்சிலின் உறுப்பினருமான ஆர். விடுதலை மற்றும் மூத்த வழக்கறிஞாகள் எ.தியாகராஜன் மற்றும் ஸ்ரீநாத் ஸ்ரீதேவன் ஆகியோர் இளம் வழக்கறிஞர்களை வாழ்த்தி சிறப்புரையாற்றினர். மேலும், இவ்விழாவில் பார் கவுன்சிலின் துணை தலைவர் வி.கார்த்திகேயன், நன்றி உரையாற்றினார்.

மேலும், இவ்விழாவில் பார் கவுன்சிலின் உறுப்பினர்கள் எம். வேல்முருகன ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

## சிறுவாபுரியில் விவசாயி நிலத்தில் நட்ட பயிரை

# அகற்றி மிரட்டல் விடுத்த சகோதரர் மீது நடவடிக்கை எடுக்க முதல்வருக்கு கோரிக்கை

ஊத்துக்கோட்டை, ஜூலை8-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சின்னம்பேடு என்று அழைக்கப்படும் சிறுவாபுரியில் வசித்து வருபவர் கங்காதரன் (வயது43) ஆவார். இவருக்கு இரண்டு சகோதரர்கள் உள்ளனர்.



இந்நிலையில், சுமார் ஒன்றரை ஏக்கர் பரப்பளவில் நெற்பயிருக்கு கங்காதரன் நாற்று நட்டு இருந்தார். இந்நிலையில், கங்காதரனின் சகோதரர் ஜெயச்சந்திரன் என்பவர் அத்து மீறி நிலத்தில் இறங்கி அதில் இருந்த சுமார் 80 சென்ட் பரப்பளவு நாற்றுகளை சேதப்படுத்தி அகற்றினார். ஜெயச்சந்திரனுக்கு உடந்தையாக அவரது மனைவியான பள்ளி ஆசிரியராக பணியாற்றும் பேபி சரோஜா மற்றும் கங்காதரனின் மற்றொரு சகோதரர் ஜெகதீசன் ஆகியோர் மேற்கண்ட அசம்பாவித சம்பவங்களில் ஈடுபட்டார்களாம்.

இதனால் பாதிக்கப்பட்ட கங்காதரன் மேற்கண்டவர்களிடம் நியாயம் கேட்டபோது கங்காதரனின் குடும்பத்துக்கு கொலை மிரட்டல் விடுத்தார்களாம். இந்த சம்பவம் குறித்து கங்காதரன் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர், காவல்துறை உயரதிகாரிகள், தமிழக முதல்வரின் தனி பிரிவு உள்ளிட்டோருக்கு புகார் அனுப்பியுள்ளார்.

# அருள்மிகு ஸ்ரீ சோமநாத சுவாமி ஆலய அஷ்ட பந்தன மகா கும்பாபிஷேக விழா





காரைக்கால், ஜூலை,8

புதுச்சேரி மாநிலம் காரைக்கால் அடுத்த திருநள்ளாறு பகுதி சுரக்குடியில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற அருள்மிகு ஸ்ரீ சோமகலாவள்ளி அம்மன் சமேத ஸ்ரீ சோமநாத சுவாமி ஆலயம். பழமை வாய்ந்த இவ்வாலய கும்பாபிஷேகம் கடந்த 2000ம் ஆண்டு நடைபெற்றது.

இந்த நிலையில் ஆலயத்திற்கு கும்பாபிஷேகம் நடத்த தீர்மானித்து கடந்த 2022ம் ஆண்டு டிசம்பர் 11ம் தேதி பாலாலயம் மற்றும் திருப்பணி துவக்க விழா நடைபெற்றது. திருப்பணி வேலைகள் முழு வீச்சில் நடைபெற்று கும்பாபிஷேக விழா கடந்த 03ம் தேதி கணபதி ஹோமம் நடைபெற்றது. 05 ம் தேதி மாலை முதல் கால யாகசாலை பூஜையுடன் துவங்கியது. நேற்று காலை 04ம் கால யாகசாலை பூஜை மகா பூர்ணாகுதியுடன் நிறைவுபெற்று கடம் புறப்பாடு நடைபெற்றது.

யாக சாலையில் பூஜித்த புனிதநீர் அடங்கிய கலசங்களை சிவ ஸ்ரீ சர்வேஸ்வர குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் ஏந்தி ஆலயத்தை வலம் வந்து வேத மந்திரங்கள் ஓத,மங்கள வாத்தியங்கள் முழங்க ஆலய விமானங்களுக்கு மகா கும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது.

தொடர்ந்து மகாதீபாராதனை நடைபெற்றது.தொடர்ந்து ஸ்ரீ சோமநாதஸ்வாமி, ஸ்ரீ சோமகலாவள்ளி அம்மன் உள்ளிட்ட மூலவர்களுக்கு மகாபிஷேகமும், மகாதீபாராதனையும் நடைபெற்றது. கும்பாபிஷேக விழாவில் சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர்.சிவா, முதுநிலை காவல்கண்காணிப்பாளர் மணீஷ் திருப்பணிக்குழு, அறங்காவலர் குழு நிர்வாகிகள் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர்.

### மருத்துவக் காரணங்களால்தான்

# டிஐஜி விஜயகுமார் தற்கொலை செய்துகொண்டார் ஏடிஜிபி அருண் தகவல்



கோவை, ஜூலை.8-

டிஐஜி விஜயகுமார் தற்கொலைக்கு பணிச்சுமையோ, குடும்பப் பிரச்சினையோ காரணம் இல்லை என்றும், மருத்துவக் காரணங்களால்தான் அவர் தற்கொலை செய்து கொண்டார் என்றும் தமிழக சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி அருண் தெரிவித்துள்ளார்.

தற்கொலை செய்து கொண்ட டிஐஜி விஜயகுமார் உடலுக்கு சட்டம் - ஒழுங்கு ஏடிஜிபி அருண் அஞ்சலி செலுத்தினார். இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய அவர், "டிஐஜி விஜயகுமார் 2009ம் ஆண்டு ஐபிஎஸ் பிரிவைச் சேர்ந்தவர். ஐபிஎஸ் தேர்வில் தேர்ச்சி பெறுவதற்கு முன்பாக 2003ம் ஆண்டு முதல் தமிழக காவல் துறையில் டிஎஸ்பியாக 6 வருடம் பணிபுரிந்து பின்பு யுபிஎஸ்சி தேர்வு எழுதி ஐபிஎஸ் ஆக தேர்வு செய்யப்பட்டு பணியில் சேர்ந்தவர். மிகவும் திறமையான அதிகாரி. எனக்கு அவரை நன்றாகத் தெரியும். மிகுந்த அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர். பல்வேறு நிலைகளில் பணி புரிந்து எல்லா இடங்களிலும் பாராட்டுகளைப் பெற்றுள்ளார்.

டிஐஜி விஜயகுமார் தற்கொலை தொடர்பான முதல் கட்ட விசாரணையில், சில வருடங்களாக அவர் மன அழுத்தத்தில் இருந்துள்ளார் என்பதும் அதற்காக சிகிச்சை பெற்று வந்துள்ளார் என்பதும் தெரியவந்துள்ளது. அவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரிடமும் நான் காலையில் பேசினேன். நான்கு நாட்களுக்கு முன்பாக மன அழுத்தம் அதிகமாக உள்ளதாக மருத்துவரிடம் தெரிவித்துள்ளார்.

கோவையில் உள்ள ஆணையர் மற்றும் ஐஜி ஆகியோர் தொடர்ந்து அவருக்கு கவுன்சிலிங் அளித்துக்கொண்டு தான் இருந்தனர். மருத்துவ காரணங்களால் இந்த மரணம் நிகழ்ந்துள்ளது. காவல் துறையில் மன அழுத்தத்தைக் குறைக்க தொடர்ந்து கவுன்சிலிங் அளிக்கப்பட்டு வருகிறது. டிஐஜி விஜயக்குமார் தற்கொலைக்கு பணிச்சுமையோ, குடும்பப்பிரச்சனையோ காரணம் இல்லை. மருத்துவ காரணங்களால் மட்டுமே இந்த தற்கொலை நிகழ்ந்துள்ளது" என தெரிவித்துள்ளார்.

# தமிழ்நாட்டில் 11-ம் தேதி வரை மழைக்கு வாய்ப்பு: வானிலை மையம் அலெர்ட்



சென்னை, ஜூலை.8-

மேற்கு திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக, இன்று ஜூன் 8 ஆம் தேதி, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

ஜூன் 9 ஆம் தேதி, தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஓரிரு இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும்

ஜூன் 10 மற்றும் ஜூன் 11 ஆம் தேதிகளில், தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளை பொறுத்தவரை, அடுத்த 48 மணி நேரத்திற்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். அதிகபட்ச வெப்பநிலை 36-37 டிகிரி செல்சியஸ் மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை 28 டிகிரி செல்சியஸை ஒட்டியே இருக்கக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

### அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம் காயக்காடு

# புதிய பேருந்து நிலையத்தினை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் திறந்து வைத்தார்





**அறந்தாங்கி, ஜூலை.8-**

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், காயக்காடு புதிய பேருந்து நிலையத்தினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ. வீ. மெய்யநாதன் திறந்து வைத்து, ஆவணத்தான்கோட்டை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பேவர் பிளாக் பணிக்கு அடிக்கல்நாட்டி துவக்கி வைத்தார்.

பின்னர் அவர் தெரிவித்ததாவது; தமிழ்நாடு முதலமைச்சரால் ஏழை, எளிய பொதுமக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறார். அந்தவகையில் இன்றையதினம் அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் காயக்காடு புதிய பேருந்து நிலையத்தினை திறந்து வைத்து, ஆவணத்தான்கோட்டை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், பேவர் பிளாக் பணிக்கு அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

அறந்தாங்கி ஒன்றியம், தொழுவங்காடு பகுதியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.7 இலட்சம் செலவில் புதிதாகக் கட்டப்பட்டுள்ள காயக்காடு புதிய பேருந்து நிலையம் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு இன்றையதினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து, ஆவணத்தான்கோட்டை கிழக்கு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.3.5 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்படவுள்ள பேவர் பிளாக் பணி அடிக்கல்நாட்டி துவக்கி வைக்கப்பட்டுள்ளது.

எனவே பொதுமக்கள் அனைவரும் தமிழக அரசின் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களை முறையாக பயன்படுத்தி வாழ்வில் முன்னேற வேண்டும் என தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சிகளில், அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் மகேஸ்வரி சண்முகநாதன், ஒன்றியக்குழு உறுப்பினர் ரவிச்சந்திரன், வட்டாட்சியர் பாலகிருஷ்ணன், ஊராட்சிமன்றத் தலைவர்கள் சுமதிசுரேஷ், கருணாநிதி, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# அரியலூர் மாவட்டம் மீன்சுருட்டியில் வேளாண் இடு பொருட்கள் வழங்கல்



அரியலூர், ஜூலை.8-

அரியலூர் மாவட்டம், மீன்சுருட்டியில் வேளாண் இடுபொருட்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இது பற்றி, ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன் வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, ஜெயங்கொண்டம் ஊராட்சி ஒன்றியம், மீன்சுருட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலின் உத்தரவிற்கிணங்க, மாவட்ட வேளாண்மை துறை சார்பில், குறுவை சிறப்பு தொகுப்பு, 2023 - 2024- ஆண்டுக்கான வேளாண் இடுபொருள்கள், 270 விவசாயிகளுக்கு வழங்கும் திட்டத்தினை, சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்வில் வேளாண்மை இணை இயக்குனர் (பொ) பூவலிங்கம், ஜெயங்கொண்டம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும், வேளாண்மை அட்மா குழு தலைவருமான இரா.மணிமாறன், வேளாண்மை உதவி இயக்குனர் சுப்பிரமணியன், வேளாண்மை அலுவலர் மகேந்திரவர்மன், துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தசாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் கோவிந்தராசு, பாலாஜி, உதவி தொழில்நுட்ப மேலாளர் மகேஷ், திமுக பொதுக்குழு உறுப்பினர் சி.ஆர். எம்.பொய்யாமொழி, மாவட்ட மீனவரணி அமைப்பாளர் எம்.ஜி.ராஜேந்திரன், மாவட்ட பிரதிநிதி எஸ்.கே.பி.சங்கரன், மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் பாலமுருகன் மற்றும் விவசாயிகள், திமுக தோழர்கள் உள்பட பலர் கலந்துகொண்டனர், இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# பெரியபாளையம் மாதா கோவில் தெருவில் ஒன்றிய குழு உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதி ரூ.11 லட்சத்தில் தார் சாலை அமைக்கப்பட்டது





ஊத்துக்கோட்டை, ஜூலை8-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், பெரியபாளையம் ஊராட்சியில் உள்ள மாதா கோவில் தெருவில் உள்ள சாலை சுமார் 13 ஆண்டுகளாக பராமரிப்பு இன்றி இருந்தது.

இதனால் அந்த சாலை குண்டும், குழியுமாக இருந்து. எனவே, இந்த சாலையை பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் தார் சாலையாக அமைத்துத் தருமாறு அப்பகுதி மக்கள் எல்லாபுரம் ஒன்றியம் 6-வது வார்டு ஒன்றிய குழு உறுப்பினர் கோகிலாவிடம் கோரிக்கை வைத்தனர்.

எனவே, போர்க்கால அடிப்படையில் தரமான முறையில் அந்த சாலையை தார் சாலையாக மாற்ற சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடம் ஒன்றிய குழு உறுப்பினர் பேசி நடவடிக்கை மேற்கொண்டார். இந்நிலையில், இந்த சாலையை ரூ.11 லட்சம் நிதியில் அமைக்க நடவடிக்கை மேற்கொண்டார்.

இதனால் மாதா கோவில் தெருவில் தற்போது தார் சாலை அமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்பட்டது. இதனால், அப்பகுதி மக்கள் தமிழக அரசுக்கும், சட்டமன்ற உறுப்பினருக்கும், ஒன்றிய குழு உறுப்பினருக்கும், சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கும் தங்களது நன்றியை தெரிவித்துக் கொண்டனர்.

# மகளிர் உரிமைத் தொகை திட்டத்திற்கு கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என பெயர் சூட்டல்



சென்னை, ஜூலை.8-

தகுதியான குடும்பத் தலைவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 ரூபாய் வழங்கும் திட்டத்திற்கு, கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் என தமிழ்நாடு அரசு பெயர் சூட்டி உள்ளது.

திமுகவின் தேர்தல் வாக்குறுதி படி, வரும் செப்டம்பர் 15 ஆம் தேதி அண்ணா பிறந்தநாளன்று, குடும்பத் தலைவிகளுக்கான ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் திட்டம் தொடங்கப்பட உள்ளது. இத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவது குறித்தும், தகுதியான பயனாளிகள் யார் என்பது தொடர்பாகவும் தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் தலைமையில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இதில், அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய் துறை மற்றும் காவல்துறை அதிகாரிகள், வங்கி மேலாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இக்கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

கூட்டத்தில் பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், மகளிர் உரிமைத் தொகைப் பெறுவதற்கு யாரெல்லாம் தகுதியானவர்கள் என்பதை பட்டியலிட்டார். திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று மாவட்ட ஆட்சியத் தலைவர்களை கேட்டுக்கொண்டார்.

**யாருக்கெல்லாம் கிடைக்காது?**

பெண் அரசு ஊழியர்களுக்கு ஆயிரம் ரூபாய் மகளிர் உதவித் தொகை கிடைக்காது. ஆண்டுக்கு இரண்டரை லட்சம் ரூபாய்க்கு மேல் வருமானம் பெறும் குடும்பத் தலைவிகளும் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகையை பெற முடியாது. நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சொந்தமாக கார் வைத்திருக்கும் குடும்பத் தலைவிகள், 5 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் பெண்களுக்கும் அரசு உரிமைத் தொகை கிடையாது. மேலும் 3 ஆயிரத்து 600 யூனிட்டிற்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படாது என்று தகவல் வெளியாகி உள்ளது.


**யாருக்கெல்லாம் கிடைக்கும்?**

21 வயதிற்கு மேற்பட்ட மகளிர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதியானவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தகுதியுடைய ஒரு பயனாளி கூட விடுபடாமல் இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்த வேண்டும் என்று மாவட்டச் ஆட்சியர்கள் கூட்டத்தில், அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ரேஷன் கார்டு எந்த கடையில் உள்ளதோ, அங்கு மட்டுமே உரிமைத் தொகை பெறுவதற்கு விண்ணிப்பிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகையை அவர்களுடைய வங்கி கணக்கில் செலுத்துவதற்கான நடவடிக்கைகளை அனைவரும் ஒன்றிணைந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளிடம் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

# செந்தில் பாலாஜி வழக்கு ஆளுநருக்கு எப்படி உத்தரவிட முடியும் ? உயர் நீதிமன்றம் கேள்வி





சென்னை, ஜூலை.8-

"அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கிய உத்தரவை நிறுத்தி வைத்ததை எதிர்த்த வழக்கில் ஆளுநருக்கு எப்படி உத்தரவிட முடியும்?" என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சட்ட விரோத பணப்பரிமாற்ற தடைச் சட்ட வழக்கில் செந்தில் பாலாஜி கைது செய்யப்பட்டு நீதிமன்ற காவலில் உள்ளார். செந்தில் பாலாஜியின் வசம் இருந்த துறைகள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு, முத்துசாமி ஆகியோருக்கு ஒதுக்கப்பட்டன. செந்தில் பாலாஜியை இலாகா இல்லாத அமைச்சராக தொடர ஆளுநர் ஏற்க மறுத்த நிலையில், துறை இல்லாத அமைச்சராக செந்தில் பாலாஜி நீடிப்பார் என கடந்த மாதம் 16-ம் தேதி தமிழக அரசு அரசாணை வெளியிட்டது.

இந்த அரசாணையை ரத்து செய்யக் கோரி வழக்கறிஞரும், தேசிய மக்கள் கட்சியின் தலைவருமான எம்.எல். ரவி, சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளார். அதேபோல, செந்தில் பாலாஜி எந்த தகுதியின் அடிக்கடையில் அமைச்சராக நீடிக்கிறார் என விளக்கம் கேட்க உத்தரவிடக் கோரி கொளத்தூரைச் சேர்ந்த ராமகிருஷ்ணன், அதிமுக முன்னாள் எம்.பி. ஜெயவர்த்தன் ஆகியோரும் வழக்குகள் தாக்கல் செய்திருந்தனர்.

இதற்கிடையில், அமைச்சர் செந்தில் பாலாஜியை நீக்கம் செய்வதாக ஜூன் 29-ம் தேதி மாலையில் உத்தரவு பிறப்பித்த ஆளுநர், அடுத்த சில மணி நேரங்களில் அந்த உத்தரவை நிறுத்திவைப்பதாக தமிழக அரசுக்கு கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில், எம்.எல்.ரவி தாக்கல் செய்துள்ள புதிய மனுவில், அமைச்சரவையில் இருந்து செந்தில் பாலாஜியை நீக்கிய உத்தரவை நிறுத்திவைத்த தமிழக ஆளுநர் ரவியின் கடிதத்தை ரத்து செய்ய வேண்டும் என கோரியிருந்தார். மேலும், அவரது மனுவில், அரசியல்சாசனத்தின்படி ஆளுநர் எடுத்த முடிவை, மறுபரிசீனை செய்ய முடியாது. நீதிமன்றம்தான் அதை நீதித்துறை ஆய்வுக்கு உட்படுத்த முடியும். ஆளுநர் முடிவு எடுத்த பிறகு, வேறு யாருடனும் கலந்தாலோசிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று மனுவில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த மனு தலைமை நீதிபதி கங்காபுர்வாலா மற்றும் நீதிபதி ஆதிகேசவலு ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தரப்பில், "அமைச்சரை நீக்க ஆளுநருக்கு அதிகாரம் உள்ள போதும், அந்த உத்தரவை நிறுத்திவைக்க அதிகாரமில்லை. மத்திய உள்துறை அமைச்சர், அட்டர்னி ஜெனரல் ஆலோசனை பெற நிறுத்தி வைத்துள்ளதாக கூறப்படுகிறது" என்று தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து வழக்கை விசாரித்த நீதிபதிகள், "ஆளுநருக்கு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பிக்க முடியுமா? தீர்ப்பு ஏதேனும் உள்ளதா?" என கேள்வி எழுப்பி, அவ்வாறான உத்தரவுகள் இருப்பின் அவற்றை தாக்கல் செய்ய மனுதாரருக்கு உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

அப்போது மனுதாரர் தரப்பில், செந்தில் பாலாஜி தொடர்ந்து அமைச்சராக நீடிக்கிறார் என தெரிவிக்கப்பட்டது. அப்போது குறுக்கிட்ட தலைமை நீதிபதி, இதனால், மனுதாரர் எப்படி பாதிக்கப்படுகிறார் என கேள்வி எழுப்பினார். மக்கள் வரிப்பணத்தில் அவருக்கு ஊதியம் வழங்கப்படுகிறது என்று மனுதாரர் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. அவர் எம்எல்ஏவாகவும் இருக்கிறாரே என்று தலைமை நீதிபதி தெரிவித்தார்.

இதையடுத்து, செந்தில் பாலாஜி எந்த தகுதியின் அடிப்படையில் அமைச்சராக நீடிக்கிறார் என விளக்கம் கோரிய ஜெ.ஜெயவர்த்தன், எம்.எல்.ரவி, ராமச்சந்திரன் ஆகியோர் தாக்கல் செய்த வழக்குகளின் விசாரணையையும் அடுத்த வாரத்துக்கு ஒத்திவைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# சிறுவாபுரி அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவிலில் நாகாலாந்து கவர்னர் இலா.கணேசன் சுவாமி தரிசனம் செய்தார்



ஊத்துக்கோட்டை, ஜூலை8-

திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், சிறுவாபுரியில் அருள்மிகு பாலசுப்ரமணிய சுவாமி திருக்கோவில் உள்ளது. இக்கோவிலில் நாகாலாந்து கவர்னர் இலா.கணேசன் நேற்று மாலை சுவாமி தரிசனம் செய்தார்.

மேலும், உலக நன்மை வேண்டி சிறப்பு பூஜைகள், சிறப்பு அபிஷேகம் உள்ளிட்டவைகளை செய்தார். கோவிலுக்கு வந்த இலா.கணேசனுக்கு அழிஞ்சிவாக்கம் பாஸ்கர் தலைமையில் பாஜகவினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். கோவிலின் சார்பாக கவர்னருக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

PUDUGAI VARALARU - National Tamil Daily : Published by S.Sivasakthivel at Plot No.1103,Periyar Nagar, Rajagopalapuram Post,Pudukkottai-622003,TamilNadu State and Printed at V.C Printograph, 144,M.K Kottai Road, Elumalaiyan Rice Mill Complex, Ambigapuram, Ariyamangalam, Tiruchirappalli-620010, TamilNadu State. Editor: S.Sivasakthivel, Phone : 04322-261577, E.Mail: pudugaivaralaru@gmail.com.



# டிஐஜி விஜயகுமார் தற்கொலைக்கு முதல்வர் உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல்

# 3600 யூனிட் மின்சாரம் பயன்படுத்தும் குடும்பத் தலைவிகளுக்கு ஆயிரம் ரூபாய் கிடையாது





# அவதூறு வழக்கில் ராகுல் காந்தியின் தண்டனை உறுதியானது


| சென்னை / புதுக்கோட்டை | 08.07.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

ஜோதி பாசு , மேற்கு வங்கத்தின் 6வது முதலமைச்சர் (பி.1914) (இ.2010)



எ. சா. ராஜசேகர் , ஆந்திராவின் 14வது முதலமைச்சர் (பி.1949) (இ.2009)



ரேவதி , தென்னிந்தியத் திரைப்பட நடிகை (பி.1966)



சௌரவ் கங்குலி , இந்தியத் துடுப்பாளர் (பி.1972)



## இன்றைய நினைவு நாள்

மயிலை சீனி. வேங்கடசாமி , தமிழறிஞர் (பி.1900) (இ.1980)



ராஜா ராவ் , இந்திய எழுத்தாளர் (பி.1908) (இ.2006)



சந்திரசேகர் , இந்தியாவின் 9வது பிரதமர் (பி.1927) (இ.2007)

